www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: நான்கு

## ஈழ யுத்தம் - 1

நீலவண்ணன்

யாழ்ப்பாணப் பொலிசாரின் தாக்குதல் உக்கிரமாகவிருந்தது. லால் சோமசிறீ எதிர்பார்த்த மாதிரி, பியதிலக குழுவினர் உதவிக்கு வரவில்லை. போராளிகள் பலர் காயமுற்றனர். கையிருப்பில் உள்ள சன்னங்களும் குண்டுகளும் முடிந்துவந்தன. யாழ்ப்பாணப் பொலிசார் எதிர்ப்பினை முறியடித்தபடி கோட்டைக்குள் பிரவேசித்தனர். அதனால் பின்வாங்கும்படி நேர்ந்தது.

பின்வாங்கி எங்கு ஓடுவது? எப்படி ஓடுவது? தென்னிலங்கையிலிருந்து வந்து யாழ்ப்பாணம் எப்படிப்பட்டது என்பதை அறியாத பல்கலைக்கழக மாணவர்களுக்கு வலம் இடம் தெரியவில்லை. மத்தியானம் போல யாழ்ப்பாணத்திற்கு வந்து இரவு தாக்குதலைத் தொடக்கினால் அவர்கள் எங்கு எப்படி ஓடுவது? லால் சோமசிறீ மட்டும் தப்பி யாழ்ப்பாண நகரத்திற்கு ஓடி வர முடிந்தது. அவரும் அன்று அதிகாலையே கைதுசெய்யப்பட்டார். ஊர்காவற்துறை ஹமன் ஹீல் கடற் கோட்டையில் சிறைவைக்கப்பட்டார்.

றோகன விஜயவீராவின் யாழ்ப்பாணக் கோட்டைச் சிறையுடைப்பு முயற்சி தோல்வியில் முடிந்தது. இச்சிறையுடைப்பு முயற்சி சம்பந்தமாகப் பின்னர் பலர் கைதாகினர். யாழ்ப்பாணத்தில் பாஸ்கரன், நாகரத்தினம் ஆகியோர் கைதாகிப் பின்னர் விடுதலையாகினர்.

வடமாகாணப் பொலிஸ்மா அதிபர் பின்னர் "ஒரு இயக்கத்தின் தலைவர் கைதாகி யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார். தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் அவரைச் சிறைச்சாலையிலிருந்து தப்பவைக்க முயன்றனர். அவர்கள் தென்னிலங்கையிலிருந்து விசேஷ பஸ்களில் வந்திருந்தனர். அவர்களின் முயற்சி தோல்வி கண்டதற்கு காரணம் அவர்களின் திடசங்கற்பமின்மைக்குறை மட்டுமன்று; உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவிகள் வந்து சேராமையுமாகும்" எனக் குறிப்பிட்டார்.

### 3

### 10 ஜூன் 1972.

காசி ஆனந்தனின் கைதோடு யாழ்ப்பாணக் கோட்டையின் ராணி மாளிகை, பொலிசாரின் விசாரணைத் தளமாகவும், சித்திரவதைக் களமாகவும் மாறத் தொடங்கியது. 1972-ம் ஆண்டின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை எதிர்த்து தமிழர் ஐக்கிய முன்னணி ஹர்த்தால் அனுட்டிக்குமாறு கோரியது. 24 மே 1972-ம் திகதியன்று முற்றவெளியில் கூட்டணித் தலைவர் செல்வநாயகம் தலைமையில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டமொன்று நடந்தேறியது. அதில் கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம், "தமிழரும் படைக்கலம் ஏந்தும் நாள் வரும். ஆதலால், வெளிநாடுகளிலுள்ள குறித்த சில நிறுவனங்களுடன் அவர்கள் நட்புறவு வைத்துக் கொள்ளல் மிக அவசியமாகும்" எனக் குறிப்பிட்டார். காசி ஆனந்தன், "புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஆறு தமிழ்ப் பிரதிநிதிகளும் சுகவீனத்தினாலோ, விபத்தினாலோ, இயற்கைக் காரணிகளினாலோ இறக்கமாட்டார்கள். ஆனால் எவையோ பிற வழிகளில் அவர்களுக்கு மரணம் சம்பவிக்கும்" என உணர்ச்சியோடு குறிப்பிட்டார். அவ்வுரை நிகழ்த்தியதன் பின்னர் ஜூன் 10-ம் திகதி காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டார்.

அரசாங்க சார்புடைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், தீவிரவாதத் தமிழ் இளைஞர் குழுவொன்றால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நல்லூர் கிராமசபைத் தலைவரான குமாரகுலசிங்கம், வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் ஆ. தியாகராஜா ஆகியோர் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை முறையே 1972 ஜூன் 4-ம் திகதியும், 07-ம் திகதியும் நிகழ்ந்தன. 15 ஜனவரி 1973-ம் திகதி அமைச்சர் குமாரசூரியர் வேலணையில் ஒரு தபாற்கந்தோரைத் திறந்து வைக்கச் சென்றார். அவர் செல்லும் பாதையிலுள்ள மதகு ஒன்றினைத் தகர்ப்பதற்கென டைனமைற்றுகளுடன் நின்ற ஞானசேகரன் (ரஞ்சன்), தாசன், திசைவீரசிங்கம் ஆகிய மூவர் கைதாகினர்.

இவை அனைத்துக்கும் அறிவுரை வழங்குபவராக மாணவர் பேரவைத் தலைவர் சத்தியசீலன் பொலீசாரால் சந்தேகிக்கப்பட்டார். பல்கலைக்கழகத் தரப்படுத்தலிற்கு எதிரான மாணவர் பேரவைக்கு பி.சத்தியசீலன் தலைவராக விளங்கினார். அவர் தொழிலற்ற ஒரு விஞ்ஞானப் பட்டதாரியாகவுமிருந்தார். 23 பெப்ரவரி 1973-ம் திகதி பொலிஸ் சார்ஜன்ட் பேரம்பலத்தினால் கைதுசெய்யப்பட்டு, கோட்டை ராணி மாளிகைக்கு விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்டார். அங்கு வைத்து ஏ.எஸ்.பி. டபிள்யூ. த. சில்வாவினால் விசாரிக்கப்பட்டார். நீண்டகாலத்தின் பின்னர் ராணி மாளிகையில் அவல ஓலம் ஒலிக்கத் தொடங்கியது. சத்தியசீலன் ஆரம்ப விசாரணையின் பின்னர் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சத்தியசீலன் வாக்குமூலத்தின் விளைவாக ஏறத்தாழ நாற்பது இளைஞர்கள் தொடர்ந்து கைதாகினர்.

கொண்டலடி வைரவர் கோவில் மடப்பள்ளியில் கூடி, வரவேற்புக் கூட்டமொன்றில் கலந்துகொள்ளவிருந்த அமைச்சர் குமாரசூரியர் மீது கைகுண்டு வீசுவதற்காக சதியாலோசனை செய்தமைக்காகவும், கைக்குண்டு தயாரித்தமைக்காகவும் இளைஞர் சிலர் கைதுசெய்யப்பட்டு கோட்டையின் பங்களாவிற்குக் கொண்டுவரப்பட்டனர். மாவை சேனாதிராசா, சோதிலிங்கம், மதியாபரணம், சிவராஜா, ராஜகுலசூரியர், குவேந்திரராஜா ஆகிய இளைஞர்கள் கைதாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். வரலாற்றுக்காலத்திலிருந்து சித்திரவதைக்குப் புகழ்பெற்ற கோட்டையின் மேல் பங்களாவில் இந்த இளைஞர்கள் ஏ.எஸ்.பி. சில்வா, இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை, பொலீஸ் சார்ஜன்ட் பேரம்பலம், இன்ஸ்பெக்டர் விக்கினேஸ்வரராஜா முதலானோரால் விசாரிக்கப்பட்டனர்.

முறிகண்டியிலுள்ள உயர் அழுத்த மின்கோபுரத்தைச் சரித்து விழுத்துவதன் மூலம் 22 மே, 1972-ம் திகதி துக்க தினத்தை யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் இருளில் மூழ்கடித்துக் கொண்டாடிடச் சதி செய்தமைக்காக இன்னொரு கூட்டம் இளஞர்கள் கைதாகினர். ஆனந்தவிநாயகம், அமரசிங்கம், ஜெயம், சுப்பிரமணியம் (மணியம்), இராசலிங்கம் ஆகிய ஐவரும் கைதாகி, குயின் ஹவுசில் வைத்து இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையால் தனித்தனியா விசாரிக்கப்பட்டனர்.



அரசாங்க ஆதரவாளர்களாக இருந்தவர்களின் வீடுகளுக்குக் கைக்குண்டு வீசினார்கள் என்பதற்காக சூரியகுமாரன், பெரியதம்பி, கனகரத்தினம், நித்தியானந்தன், கிருபைநாதன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். நல்லூர் கிராமசபைத் தலைவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமைக்காக சி. தனபாலசிங்கம், சி. சபாரத்தினம் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர். வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் தியாகராஜாவைச் சுட்டுக்கொல்ல முயன்றமைக்காக ரீ. ஜீவராஜா, பூபதி பாலவடிவேற்கரசன், எஸ். சபாலிங்கம், பாலகிருஷ்ணன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுக் கோட்டைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

09 மார்ச் 1973 ஆம் திகதி மாவை சேனாதிராசா, கே. சிவராஜா, ரி. எம். குமாரசாமி, தனபாலசிங்கம் (செட்டி), சி. பத்மநாதன் (கண்ணாடி), சந்திரகுமார், ஆர். இரத்தினகுமார், எம். பாலரத்தினம் ஆகிய எண்மர் கைது செய்யப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து ரீ. சபாரத்தினம் (படா), ஏ. பாலவடிவேற்கரசன் (பூபதி), ரி. ராஜலிங்கம் ஆகியோர் கைதாகினார்.

31 மார்ச் 1973, ஆம் திகதி பருத்தித்துறைக்கு அண்மையில் 20000 டிற்றோனேற்றர்ஸ்களுடன் யோகச்சந்திரன் (குட்டிமணி), ஞானக்கமலன் ஆகிய இரு இளைஞர்கள் கைதாகினர். தீவிரவாதத் தமிழ் இளைஞர்களாகக் கருதப்பட்ட த. முத்துக்குமாரசாமி, புஸ்பராஜா வசந்தராஜா, ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர்.

எனவே, ஆகஸ்ட் 1973, ஆம் திகதியளவில் நாற்பத்தொரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். பத்தொன்பது வயது இளைஞர் ஒருவரைப் பொலீசார் சல்லடை போட்டுக் கைது செய்யத் தேடித் திரிந்தனர். அவரே வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆவர்.

கைதாகிக் கோட்டை குயின்ஸ் ஹவுசுக்குக் கொண்டுவரப்பட்ட இளைஞர்கள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை முதலான பொலிஸ் அதிகாரிகளினால் விசாரிக்கப்பட்டனர். சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத கேவல முறைகளைப் பிரயோகித்துச் சந்தேக நபர்களை தொல்லைப்படுத்தி முறைப்பாடுகள் பெறப்பட்டனர்; நீண்ட நேரமோ, கடினமாகவோ, சித்தரவதை மூலமோ வினாத்தொடுத்து பொலீசார் சாட்சியம் பெறும் முறைகள் 'தேர்ட் டிகிரி மெதட்ஸ்' (Third Degree Methods) எனப்படும். கைதாகிய இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் மீது சுமத்தப்பட்ட சம்பவங்கள் பொய்யானவையல்ல.

கோட்டைக் குயின் ஹவுஸில் கைதாகிய இளைஞர்கள் பல தடவைகள் சித்திரவதைக்கும் விசாரணைக்குமுள்ளாகினர். 03, ஆகஸ்ட் 1973 ஆம், திகதியும், 04 ஆம் திகதியும் சி. குவேந்திரராஜா இந்த மாளிகையில் வைத்து சப் இன்ஸ்பெக்டர் விக்னேஸ்வராவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். 31, ஜூன் 1973-ம் திகதியிலிருந்து சில நாட்கள் வே. சுப்பிரமணியம் (மணியம்) இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையால் இங்குவைத்து விசாரிக்கப்பட்டார். 10, மார்ச் 1973ம் திகதி சி. தனபாலசிங்கம் (செட்டி) இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். 23 மார்ச் 1973ம் திகதி நா. அமரசிங்கம், ஏ.எஸ்.பி. சில்வாவால் விசாரிக்கப்பட்டர். 03, மே. 1973ம் திகதி ச. சபாலிங்கமும், 06ம் திகதி பாலகிருஷ்ணனும் பஸ்தியாம்பிள்ளையால் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரிடமிருந்தும் தவறொத்துக்கொள்ளும் வகையில் தவறேற்பு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

### 21 ஆகஸ்ட் 1976.

யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலை வாயிலுக்கு, சிறையிலிருந்து விடுவிக்கப்படவிருந்த கிளிநொச்சி இளைஞர்களை வரவேற்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், செல்லத்தம்பு, யோகேஸ்வரன் ஆகியோர் வேறு சில ஆதரவாளர்களுடன் வந்தனர். கோட்டை வாயிற் கடமைக்கிருந்த பொலீசார் அவர்களை உள்ளே விடாது தடுத்தனர். 'பொலீஸ் அத்தியட்சகரின் அனுமதியின்றி எவரும் கோட்டைக்குள் நுழைய முடியாது' என அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அமிர்தலிங்கம் குழுவினர் கோட்டை வாயிலிலிருந்து திரும்பி வரும்போது, கோட்டையின் வெளி வாயிலோடு இருந்த பொலீஸ் பெறக்சில் (சின்னக் கோட்டையில் இருந்தது) இருந்து காருக்குக் கற்கள் வீசப்பட்டன. அமிர்தலிங்கம் பொலீஸ் அத்தியட்சகரிடம் இக் கல்லெறிச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்வதற்காகப் பொலீஸ் நிலையத்திற்குள் ஏனையோருடன் நுழைந்தபோது, வெளியே காரினுள் திருமதி. அமிர்தலிங்கம் அமர்ந்திருந்தார்.

பொலிஸ் நிலையத்தில் அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டையோ வரவையோ பொலீஸ் அத்தியட்சகர் செனேவிரத்தினகனம் பண்ணாது வேண்டா வெறுப்பாக நடந்துகொண்டார். றிசேவ் பொலிஸ் செல்லத்துரையை அழைத்து, அமிர்தலிங்கத்தின் முறைப்பாட்டைப் பதியுமாறு கூறிவிட்டு வெளியேறினார். அமிர்தலிங்கம் முறைப்பாடு செய்து கொண்டிருந்த போது, பொலீஸ் பெறச்சிலிருந்தும், யாழ்ப்பாணம் ஸ்ரேடியத்திலிருந்தும் பொலீசார் வெளிவந்து, திருமதி. அமிர்தலிங்கம் அமர்ந்திருந்த காரைச் சூழ்ந்து கொண்டனர். தூஷணை வார்த்தைகளால் ஏசியதுடன் காரை அறைந்து உலுப்பினர். கலவரத்தை அறிந்து அமிர்தலிங்கம் வெளியில் விரைந்து வந்த போது, அவர்களில் ஒருவரான ரணசிங்க காரின் முன் கண்ணாடியை அறைந்து நொறுக்கியதுடன், அமிர்தலிங்கத்தையும் ஓங்கி அறைந்தான். இக் கலவரத்தைக் கண்ணுற்ற ஏ.எஸ்.பி. ஒருவர் விரைந்து காரடிக்கு ஓடி வந்ததால், மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நேராது தவிர்க்கப்பட்டது.

பின்னர் 107 பொலீசாரைக் கொண்ட ஆளடையாள அணிவகுப்பு நடைபெற்றது. தாக்கியவனை அடையாளங்காட்டச் சாட்சிகளால் முடியவில்லை. ஆனால், பொலீஸ் நிலைய எழுதுவினைஞர் இருவர் ரணசிங்கவை அடையாளம் காட்டினர். விசாரணை நிகழ்ந்தது. இழுத்தடித்து ஒருவிதமாக 27 ஜனவரி, 1978ல், பதினைந்து மாதங்களின் பின்னர், ரணசிங்க சேவை நீங்கம் செய்யப்பட்டான். அரச பாதுகாப்புப் படையினால் தமிழ் மக்கள் அவமானப் படுத்தப்படுவதும், இம்சைப்படுத்தப் படுவதும் புதிய சங்கதிகளல்ல.

(தொடரும்)

படிப்பகம்